**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம், திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 006/2022** **நாள்: 07.07.2022**

**'சலனமில்லா மனதினிடம் இந்தப் பிரபஞ்சம் தன்னைக் கையளிக்கின்றது' – லாவோட்சே**

# என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்!**

நாம் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டிய நேரம் இது.
பல்வேறு சிக்கல்களால் 2 ஆண்டுகளாக எந்தப் பயிலரங்கத்திலும்
கலந்து கொள்ள இயலாமல், இருந்த இடத்திலே
தியானம், கருத்தரங்குகளில் கலந்து கொண்டது
நம்மை சலிப்படையச் செய்தது உண்மைதான்.

ஆனால் மீண்டும் இறைவன் அற்புதமாக
ஒரு விடியலை நமக்குக் கட்டளையிட்டுள்ளார்.
எனவே நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.
சபை முழுமையும் கருத்துப் பரிமாற்றப் பேரவையில் கலந்து கொள்கிறோம்
என்ற மகிழ்ச்சியான செய்தியை ஆனந்தமாகப் பகிர்ந்து கொள்கிறேன்.

**பல காரியங்களுக்கு நாம் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.**

**கருத்துப் பரிமாற்றப் பேரவைக்காய் நன்றி சொல்வோம்.**
பெருந்தொற்றிலிருந்து தப்பித்து அடைக்கல அன்னை சபையாக
கருத்துப் பரிமாற்றப் பேரவையில் ஒன்று சேரும் வாய்ப்புக்காக
இறைவனுக்குக் கட்டாயம் நன்றி சொல்ல வேண்டும்.

**மையக் கருத்துக்காக நன்றி சொல்வோம்;**
பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து வழிநடக்க என்ற
அருமையான மையக்கருத்தை இறைவன் நமக்குத் தந்து
இந்தப் பிரபஞ்சம் போல் நாம் விரிந்து விசாலமாக
எண்ணம், சிந்தனை, மனநிலையோடு வாழ
நமக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்புக்காக நன்றி சொல்வோம்.

**பேரன்புக்காக நன்றி சொல்வோம்.**
அன்பே அனைத்திற்கும் ஆதாரமாயிருக்கிறது.
நமக்கோ பேரன்பிற்கான அழைப்பு விடப்பட்டிருக்கிறது.

கடவுள் நம்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பதால்தான்
நம் தகுதிக்கும் மேலான இலக்கை நமக்கு நிர்ணயித்திருக்கிறார்.
தன் குழந்தை மிகச் சிறந்த அறிவாளியாக வேண்டும்
என்ற ஆவலோடு 60 மதிப்பெண் வாங்கும் தன் குழந்தைக்கு
அடுத்த தேர்வில் 100 விழுக்காடு வாங்க வேண்டும்
என இலக்கை நிர்ணயிக்கும் தந்தை போல
நம் இறை தந்தை '**பேரன்பு**' என்ற
நூறு விழுக்காடு இலக்கை நமக்கு நிர்ணயித்துள்ளார்.
நம் தந்தை நமக்காக நிர்ணயித்துள்ள இலக்கை நோக்கி
நாம் முன்னேற வேண்டுமல்லவா?
இன்றே நம் இலக்கு நோக்கிய பயணத்தைத் தொடங்குவோம்.
இடையில் வரும் சோர்வு, களைப்பு, அவநம்பிக்கை
அனைத்தையும் உரமாக்கி நம் பயணத்தை உறுதிப்படுத்துவோம்.

**ஒருங்கிணைதலுக்காக நன்றி சொல்வோம்.**
ஒருங்கிணைதல் காலத்தின் கட்டாயம்.
இன்றைய சமூகத்தில் தனித்துக் குரலெழுப்புவதும்
தனித்து சாதிப்பதும் சாத்தியமில்லை.
ஒருங்கிணைந்த குரல்கள் உரக்கக் கேட்கின்றன.
ஒருங்கிணைந்த மனிதர்கள் சாதிக்கிறார்கள்.
இன்றைய கண்டுபிடிப்புகள் கூட தனி ஆட்களால் அல்ல.
தனி ஆட்களை உள்ளடக்கிய குழுக்களாலே நிகழ்த்தப்படுகின்றன.

இன்றைய ஆட்சியமைப்பும் அரசன்/ அரசி என்ற தனி மனிதரை மையப்படுத்தியல்ல;
மக்கள் குழுக்களில் நம்பிக்கை கொண்ட மக்களாட்சியாக (Democracy) இருக்கிறது.
இதையும் கடந்து மக்கள் சமூக மையமாக (Sociocracy)
ஆட்சியைப் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.
இந்தச் சூழலில் பிரிவினை சக்திகளில் நம்பிக்கைக் கொண்டு
நாம் ஒருங்கிணைதலை தாமதப்படுத்துவது
அறியாமையின் உச்சம் என உணர்வோம்.
ஒருங்கிணைவதற்கான ஆண்டவரின் அழைப்பை ஏற்று
அனைவரும் நலமோடு வாழ, ஒருங்கிணைய
ஆண்டவர் இயேசுவும் அன்னை மரியாவும் நமக்கு அருள் புரிவார்களாக!

**வழிநடப்பதற்காய் நன்றி சொல்வோம்.**
வழிநடப்பது கிறிஸ்தவ ஆன்மீகம்.
நாம் விண்ணை நோக்கி வழி நடப்பவர்கள்.
நாம் வழிப்போக்கர்கள், பயணிகள்
இன்னும் சொல்லப்போனால் ***திருப்பயணிகள்***.
வழிநடக்க நம்மை இறைவன் அழைத்ததிலிருந்தே

நம் வாழ்வும் மனநிலையும் எப்படி இருக்க வேண்டும்
என்று புரிந்து கொள்கிறோம்.
வழிப்போக்கர்களுக்கு சொந்தமாக எதுவுமே இருப்பதில்லை.
வீடு, உடைமை, பொருட்கள் என்ற எதுவும் இல்லாமல்
மிகக் குறைந்த சுமையில் வாழ்வை
அமைத்துக் கொள்பவர்கள் வழிபோக்கர்கள்.
தனது உணவுக்கும் தங்குமிடத்திற்கும்
அடுத்தவரை சார்ந்து வாழ்பவர்கள்.
மற்றவர்களின் தயவில் வாழ்பவர்கள்.

திருப்பயணிகள் கூட்டம் கூட்டமாகப் பயணிப்பவர்கள்.
இவர்கள் ஒருவர் மற்றவருக்கு அனுசரணையாக இருக்கிறார்கள்.
யாரும் தான்தான் பெரியவன் சிறந்தவன்
என்று சொல்லிக் கொள்வதுமில்லை.
சொல்லவேண்டிய அவசியமும் இல்லை.
மொத்தத்தில் தான் போய்ச் சேர வேண்டிய
இடம் பற்றியே கருத்தாய் இருக்கிறார்கள்.

நாமும் நம் இலக்காகிய இறைவனை அடைவது மட்டுமே
நம் நோக்கமாக இருக்க வேண்டும் என
இறைவனும் அடைக்கல அன்னையும் விரும்புகிறார்கள்.
**புரிந்து கொள்வோமா?** இந்தப் பின்னணியில்
**கருத்துப் பரிமாற்றப் பேரவைக்கு** அனைவரையும் அழைக்கிறேன்.

## கருத்துப் பரிமாற்றப் பேரவை (TRANSMISSION CHAPTER):

- பொதுப்பேரவையின் கொள்கைகளையும், சிந்தனைகளையும் அனைவருக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக **கருத்துப் பரிமாற்றப் பேரவை (Transmission Chapter)** நடத்தப்படுகிறது.

- இதன் நோக்கம் அனைத்து சகோதரிகளுக்கும் பொதுப் பேரவை கொண்டு வந்த இறையருளை பகிர்ந்து கொடுப்பதும், பேரவை நமக்குக் காட்டுகின்ற வழியில் நடப்பதற்கு நம்மைத் தயாரிப்பதுமாகும். எனவே அனைவரும் தவறாது உங்களுக்குக் குறிக்கப்பட்ட குழுவில் கலந்துகொள்ள வேண்டும்.

- இந்த முறை ஏற்கனவே பேரவையில் தீர்மானித்தபடி பொதுப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் கருத்தாளர்களாகக் கொண்டு கருத்துப் பரிமாற்றப் பேரவை நடத்துகிறோம்.

- பேரவையின் கொள்கைகளை யாரோ ஒரு சிலர் விளக்குவதும் எடுத்துச் சொல்வதும் போதுமானதல்ல. பேரவையின் அனைத்து உறுப்பினர்களும் விளக்கமளிக்க வேண்டும்; வாழ்வாக்க வேண்டும்; வாழ்வாக்க மற்றவரைத் தூண்ட வேண்டும்.

- இதற்கு உதவும் வகையில் பேரவை உறுப்பினர்கள் 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கனவே சுற்றுமடலில் குறிக்கப்பட்டுள்ள 40 சகோதரிகளும் 1 முதல் 11 அதிகாரம் கொண்ட '**பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைந்து வழிநடக்க**' என்ற பேரவை மையக்கருத்தை விளக்குவார்கள். இவர்களுக்கு கருத்துப் பரிமாற்றப் பேரவையின் 3 நாட்களில் 1 1/2 நாள் ஒதுக்கப்படும். அதனைத் திட்டமிட ஜீலை 20 அன்று கூட்டம் நடத்தப்படுகிறது. இக்குழு "**பேரவைக் கொள்கை விளக்கக் குழு**" என்று அழைக்கப்படும்.

- பேரவை மையக்கருத்தை வாழ்வாக்கும் நடைமுறைகளை எவ்வாறு வாழப் போகிறோம் என்பதை அடுத்த குழுவினர் விளக்குவார்கள்.

- இவர்கள் பேரவை "**பேரவைக் கொள்கை வாழ்வாக்கக் குழு**" என்று அழைக்கப்படுவர். ஒவ்வொரு கருத்துப் பரிமாற்றப் பேரவைக்கும் "**பேரவைக் கொள்கை வாழ்வாக்கக் குழு**" அமைக்கப்பட்டுள்ளது. பொதுப்பேரவையின் 12 முதல் 15 அத்தியாயங்களிலும், பேரவை விவாதங்களிலும் வெளிப்படுத்தப்பட்ட சிறந்த ஆன்மீக நடைமுறைகளை வாழ்வாக்க இவர்கள் வழிகாட்டுவார்கள்.

- இந்தப் **பேரவைக் கொள்கை வாழ்வாக்கக் குழுவுக்கான** தயாரிப்புக் கூட்டம் **13.07.2022** அன்று **தஞ்சை மாநிலத் தலைமையகத்தில்** நடைபெறும். சிரமம் பார்க்காது அனைத்து சகோதரிகளும் கலந்து கொண்டு இப்பேரவைக் கருத்துப் பரிமாற்ற அமர்வின் வழி சபை ஆன்மீக மறுமலர்ச்சி காண ஆவன செய்வோம்.

**இடம் : தஞ்சை மாநிலத் தலைமையகம்**
**நாள் : 13.07.2022**

- அனைவரும் **காலை 8.30** மணிக்கு வந்து சேர்வோம்.
- கருத்துப் பரிமாற்றப் பேரவை பற்றிய இந்த சுற்றுமடல் கருத்துப் பரிமாற்றப் பேரவை நிறைவு பெறும் வரையிலும், உங்கள் அறிவிப்புப் பலகையில் இருக்க வேண்டும். தயவு செய்து File -இல் வைக்க வேண்டும் என்பதற்காக எடுத்துவிடாதீர்கள். அனைவருக்கும் அது நினைவூட்டுதலாக இருக்கும்.

**பேரவைக் கொள்கை வாழ்வாக்கக் குழு உறுப்பினர்கள்:**

## Group 1

| | | |
|---|---|---|
| 01. | 0618 | Sr. Arulanandammal |
| 02. | 0621 | Sr. Kulandaiammal |
| 03. | 0679 | Sr. Chandra |
| 04. | 0703 | Sr. Rita |
| 05. | 0704 | Sr. Matilda Mary |
| 06. | 0730 | Sr. Nirmala Devi |
| 07. | 0731 | Sr. Antoniammal |
| 08. | 0763 | Sr. Kulandai Therese |
| 09. | 0773 | Sr. Kanickai Mary |

| | | |
|---|---|---|
| 10. | 0775 | Sr. Maria Vimala |
| 11. | 0781 | Sr. Maria Elizabeth Rose |

## Group 2

| | | |
|---|---|---|
| 01. | 1008 | Sr. Antony Kamala Pushpam |
| 02. | 1089 | Sr. Assumta Sheela |
| 03. | 1107 | Sr. Arockia Arul Jothi |
| 04. | 1119 | Sr. Margaret |
| 05. | 1158 | Sr. Sebasthiammal |
| 06. | 1177 | Sr. Selva Rani |
| 07. | 1187 | Sr. Benedict Darlin |
| 08. | 1189 | Sr. Christy Rani |

## Group 4

| | | |
|---|---|---|
| 01. | 0813 | Sr. Maria Sagaya Vanaja |
| 02. | 0818 | Sr. Siluvai Thomai Paulal |
| 03. | 0824 | Sr. Josephine Therese Rani |
| 04. | 1321 | Sr. Maria Mallika |
| 05. | 1332 | Sr. Chindrala Mary |
| 06. | 1339 | Sr. Kulandai Therese Rani |
| 07. | 1353 | Sr. Alis Saleth |
| 08. | 1354 | Sr. Annai Theresal |
| 09. | 1363 | Sr. Joyci Jenifer |
| 10. | 1374 | Sr. Sona Sharmila |
| 11. | 1391 | Sr. Maria Christina Sheela |
| 12. | 1393 | Sr. Michael Arockia Sabina |

## Group 5

| | | |
|---|---|---|
| 01. | 1211 | Sr. Dennis Prema |
| 02. | 1226 | Sr. Stella Xavier |
| 03. | 1235 | Sr. Arockia Sudha |
| 04. | 1242 | Sr. Fathima Mary |
| 05. | 1257 | Sr. Vasantha Mary |
| 06. | 1275 | Sr. Irudaya Sophia |
| 07. | 1277 | Sr. Johnsi Rani |
| 08. | 1281 | Sr. Maria Carmel |
| 09. | 1289 | Sr. Stella Cecily Clara |
| 10. | 1298 | Sr. Delphina Mary |
| 11. | 1302 | Sr. Gnana Arockia Selvi |
| 12. | 1313 | Sr. Josephine Dhivya |

## Group 7

| | | |
|---|---|---|
| 01. | 1412 | Sr. Catherine Narmada |
| 02. | 1413 | Sr. Helen Gracy Punitha |

03. 1421 Sr. Deepa Jeneth
04. 1434 Sr. Anto Princy
05. 1453 Sr. Arokiya Terency
06. 1471 Sr. Joice Preethi
07. 1482 Sr. Kanishta
08. 1490 Sr. Megilla Silvariya Mary

## Group 8

01. 0829 Sr. Victoria Mary
02. 0835 Sr. Isabella Rosalinda
03. 0851 Sr. Sagaya Mary
04. 0859 Sr. Gerarda Lucia Jackuline
05. 0864 Sr. Jebamalai
06. 0867 Sr. Josephine Emelda Arokiam
07. 0870 Sr. Lourdu Mary Romey
08. 0879 Sr. Sebestiammal
09. 0891 Sr. Stella Jacqueline Mary
10. 0906 Sr. Alphonsal
11. 0914 Sr. Immaculate Daisy May
12. 0919 Sr. Lourdu Maria Bridgit
13. 0930 Sr. Agnesammal
14. 0939 Sr. Leema Rose
15. 0941 Sr. Leona Amali
16. 0946 Sr. Rose Mary

## Group 10

01. 0960 Sr. Pauline Theresal
02. 0965 Sr. James Mary
03. 0968 Sr. Josephine Sagaya Mary
04. 0975 Sr. Selva Mary
05. 0984 Sr. Jesintha Mary
06. 0989 Sr. Pauline Fatima
07. 0996 Sr. Alphonsa Mary
08. 0995 Sr. Victoria Amalorpavam
09. 0997 Sr. Arul Anita
10. 1035 Sr. Juliette Parimala Rose Malar
11. 1047 Sr. Stella Josephine
12. 1052 Sr. Bernadeth Mary

**இவர்கள் அனைவரும் 13.07.2022 அன்று நடைபெறும் பயிலரங்கில் கலந்து கொள்ள வேண்டும்.**

## சகோதரிகளின் கனிவான புரிதலுக்கு:

- பேரவையின் கொள்கைகளையும் தீர்மானங்களையும் செயல் திட்டங்களையும் பேரவை உறுப்பினர்களைக் கொண்டே விளக்குவோம் எனப் பொதுப் பேரவையில் தீர்மானித்தோம். அதன்படி பேரவை உறுப்பினர்கள் 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**01. பேரவைக் கொள்கை விளக்கக் குழு:**

இவர்களுக்கான பெயர்கள் கூட்டம் நடக்கும் நாள் (20.07.2022) ஏற்கனவே கடந்த சுற்றுமடலில் தெரிவித்திருக்கிறோம்.

**02. பேரவைக் கொள்கை வாழ்வாக்கக் குழு:**

இவர்களுக்கான அறிவிப்பும், கூட்டம் நடைபெறும் நாளும் (13.07.2022) இந்த சுற்றுமடலில் இடம் பெறுகிறது. இந்த இரு குழுக்களும் கருத்துப் பரிமாற்றப் பேரவையில் பங்களிப்பு செய்வார்கள்.

- இன்னொரு கேள்வி எழுகிறது. ஏற்கனவே பொதுப்பேரவையில் ஒவ்வொரு 4 பேருக்கும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் பணி என்ன? அவர்கள் **"சபை ஏற்பாடுகள் நடைமுறை விதிகள் மறு ஆய்வுக் குழு"** **"Constitution Revision Committee" (CRC)** இந்தக் குழு நமது கருத்துப் பரிமாற்றப் பேரவைக்குப் பின் கூட்டப்படும். நமது ஏற்பாடுகளில் மாற்றம் செய்யப் பேரவை அமர்வை நீட்டிப்பு செய்யத் திருப்பேராயத்தின் அனுமதிக்காக முறைப்படி விண்ணப்பித்திருக்கிறோம். முறையான அனுமதி பெற்றபின் இக்குழு செயல்படத் தொடங்கும்.

- உங்கள் சபைத் தலைமை அன்னை சட்ட நுணுக்கங்கள் அறிந்தவர். Civil / Canon Law அடிப்படையில் அனைத்தையும் செய்பவர். இதில் நம்பிக்கை வைத்து அவசியமற்ற பதட்டத்தைத் தவிர்த்து விடுங்கள்.

- உங்கள் ஆர்வம் மகிழ்ச்சியளிக்கிறது. அதே ஆர்வத்தோடு நாமும் மற்றவரும் வாழவும் பிறர் வாழ உதவவும் அனைவரும் இணைந்து முயல்வோம்.

**கருத்துப் பரிமாற்றப் பேரவை வழி**
**அனைவரும் இறையாசீரை**
**நிறைவாகப் பெற்று**
**பிரபஞ்சப் பேரன்பில் ஒருங்கிணைத்து வழிநடக்க**
**ஆண்டவர் இயேசுவும் அன்னை மரியாவும்**
**அபரிமிதமாய் நம்மை ஆசீர்வதிப்பார்களாக!**

**பிரபஞ்சப் பேரன்பில்,**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**